# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.54/2022

### அ.சா. 11(LW11)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சத்தியபிரகாஷ் | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | நட்ராஜ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **07.03.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

2ஆம் எதிரி ஆஜர்.

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2021 அன்று காலை 10.48 மணிக்கு நான் பிரேத பரிசோதனை மருத்துவராக பணியில் இருந்த போது கருப்பையா வயது 32 ஆண் என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவல் ஆய்வாளர் தாலுகா காவல் நிலையம் அவர்களால் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோள் கடித எண் 857/2021 நாள் 15.06.2021 அந்த கடிதம் அ.சா.ஆ.6ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. பிரேதத்துடன் வந்தவர் தலைமைக்காவலர் 632 திரு.வேலுமணி சட்டப்பிரிவு 341,294(பி),302,307 இதச

**அங்கம் மட்சம் அடையாளங்கள்**

1. இடது நெற்றியில் காய தழும்பு
2. வலது முட்டியில் காய தழும்பு

பிரேதம் 15.06.2021 அன்று 11.00 மணிக்கு என்னால் பார்வையிடப்பட்டு பிரேத பரிசோதனை தொடங்கப்பட்டது. பிரேதத்தில் விரைப்பு தன்மை இருந்தது.

**புறத் தோற்றம்**

மிதமான வளர்ச்சியடைந்த ஆண் பிரேதம் மல்லாந்த நிலையில் ஒத்தப்பரிமானத்துடன் இருந்தது. கண் விழி முடியிருந்தது. நாக்கு உள்ளே இருந்தது.

**புறக்காயங்கள்**

1.குத்துக்காயம் 4x3x7செ.மீ அளவுக்கு வலது பக்க கழுத்தின் கீழ் பகுதியில் காணப்பட்டது.

**பிரேத பரிசோதனை விபரங்கள்**

1. விலா எலும்பு – வலது பக்கத்தில் 1 முதல் 3 விலா எலும்புகள் முறிந்து காணப்பட்டன.
2. வலது காரை எலும்பு (Clavicle) எலும்பு முறிவு காணப்பட்டது.
3. நெஞ்சுக்கூட்டு பகுதியில் 2 1/2 லிட்டர் அளவுக்கு உறைந்த இரத்தம் காணப்பட்டது.
4. இதய அறைகள் – வலது அறை நிரம்பியும், இடது அறை காலியாகவும் வெளிரியும் காணப்பட்டது.
5. வலது நுரையீரல் – நுரையீரலின் வலது பக்கத்தில் 3x2x3 செ.மீ ஓட்டையுடன் காயம் காணப்பட்டது. வெளிரி காணப்பட்டது.
6. இடது நுரையீரல் – வெளிரி காணப்பட்டது.
7. குரல் வளை எலும்பு நன்கு இருந்தது.
8. வயிறு – 100 ml அளவுக்கு ஜீரணமான உணவு துகள்கள் இருந்தது.
9. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் – வெளிரி காணப்பட்டது.
10. கபாலம் மற்றும் ஜவ்வு பகுதி நன்றாக இருந்தது.
11. மூளை வெளிரி காணப்பட்டது.

பிரேத பரிசோதனை பிற்பகல் 12.00 மணிக்கு முடிந்தது.

**கருத்துரு**

விசரா உடல் உறுப்பு பரிசோதனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேலும் இறப்பானது பிரேத பரிசோதனைக்கு முன்னர் 17.00 முதல் 19.00 மணிக்குள் நிகழ்ந்திருக்கக் கூடும் என சான்று வழங்கினேன்.

நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

**<u>இறுதிக் கருத்துரு</u>**

பிரேத பரிசோதனை முடிவு மற்றும் விசரா பரிசோதனை முடிவின் படி இறந்தவர் தனக்கு ஏற்பட்ட பல்வேறு காயத்தினால் மற்றும் முக்கியமான உடல் உறுப்பு காயத்தினால் (வலது நுரையீரல்) ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கினால் இறந்திருக்கக்கூடும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய இறுதி கருத்துரு சான்று அ.சா.ஆ.8ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி வலது நுரையீரலில் ஏற்பட்ட ஓட்டை தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆயுதத்தால் (சா.பொ.2) குத்தினால் ஏற்பட வாய்ப்புண்டு. மேற்கண்ட 1 முதல் 3 வரையில் உள்ள காயங்கள் அதே ஆயுதத்தால் தாக்கும் போது ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.03.08 10:39:11 +0530

Additional District Judge,

Dindigul.